வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—வான்மதி

தேதி 9.11.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாட்டின் ஆன்மிகம் மற்றும் பாரம்பரியத்தில் சமண தத்துவங்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி உத்தரகண்ட் மாநிலம் டேராடூனில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

பீகார் சட்டப் பேரவை தேர்தலின் இறுதி கட்ட வாக்குப் பதிவு நாளை மறுநாள் நடைபெற உள்ள நிலையில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

புதுச்சேரியில் பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் படிவங்கள் நாளை முதல் வீடு வீடாகச் சென்று சேகரிக்கும் பணி தொடங்க உள்ளது.

*முர்மு*

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது ஆப்பிரிக்க பயணத்தின் முதல் கட்டமாக அங்கோலா நாட்டின் அதிபர் திரு ஜோவோ மேனுவலுடன் இன்று இருதரப்பு பேச்சு வார்த்தைகளை மேற்கொள்கிறார். அரசு முறைப் பயணமாக ஆப்பிரிக்காவில் உள்ள அங்கோலா மற்றும் போட்ஸ்வானா ஆகிய நாடுகளுக்கு புறப்பட்டுச் சென்ற அவர் நேற்று இரவு அங்கோலா சென்றடைந்தார். அந்நாட்டின் சுதந்திர தின விழா பொன்விழா கொண்டாட்டங்களில் பங்கேற்க உள்ளார். தொடர்ந்து அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார். சுகாதாரம், விண்வெளி தொழில் நுட்பம், டிஜிட்டல் கட்டமைப்பு, உணவு பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து உயர்மட்ட ஆலோசனைகளை மேற்கொள்வார்.

*சி பி ராதாகிருஷ்ணன்*

சங்க காலத்திலும் அதற்கு பிந்தைய காலத்திலும், தமிழ் இலக்கியங்களுக்கு சமண முனிவர்கள் மற்றும் அறிஞர்கள் சிறந்த பங்களிப்பை வழங்கி உள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் புகழாரம் சூட்டி உள்ளார். நாட்டின் ஆன்மிகம் மற்றும் பாரம்பரியத்தில் சமண தத்துவங்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். கர்நாடக மாநிலம் ஹசன் மாவட்டத்தில் சரவண பெலகலாவில் இன்று நடைபெற்ற ஆச்சார்ய சாந்தி சாகர் மகராஜின் நினைவு நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார். உலகில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலை நாட்ட சமண மதக் கொள்கைகள் வழி காட்டுவதாக குடியரசு துணைத் தலைவர் அப்போது தெரிவித்தார். தொடர்ந்து மைசூர் சென்ற குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் ஜே எஸ் எஸ் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். பகவத் கீதையை மேற்கோள் காட்டி, மாணவர்கள் வெகுமதியைப் பற்றி

சிந்திக்காமல் அவரவர் கடமைகளை சரிவர செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

மோடி

உத்தரகண்ட் மாநில உதய தினம் இன்று கொண்டாடப்பட்டது. மாநிலத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா ஆகியோர் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். முன்னதாக, வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி டேராடூன் சென்றடைந்தார். அங்குள்ள வன ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்………… **(வாய்ஸ்)**

பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைத்த திட்டங்களில் குடிநீர், நீர்ப்பாசனம், தொழில்நுட்பக் கல்வி, எரிசக்தி, நகர்ப்புற மேம்பாடு, விளையாட்டு மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட பல முக்கிய துறைகளை உள்ளடக்கியதாகும். பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 28,000 க்கும் மேற்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ரூ .62 கோடிக்கும் அதிகமான நிதி உதவியையும் பிரதமர் விடுவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், நினைவு தபால் தலையையும் பிரதமர் வெளியிட்டார். அங்கு கூடியிருந்த மக்களிடையே உரையாற்றிய அவர், கடந்த 25 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் இந்த மாநிலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்று குறிப்பிட்டார். உத்தராகண்டில் இதுவரை பயன்படுத்தப்படாத திறனை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

உத்தராகண்டை வளர்ச்சியின் புதிய உச்சத்திற்கு கொண்டு செல்ல "இரட்டை எஞ்சின் அரசு" தொடர்ந்து பணியாற்றி வருவதாக பிரதமர் கூறினார். முன்னதாக, கண்காட்சி ஒன்றை பார்வையிட்ட திரு. மோடி, பல்வேறு பங்குதாரர்களுடன் கலந்துரையாடினார்.

*பீகார்-தேர்தல்*

பீகார் சட்டப் பேரவை தேர்தலில் 2-ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப் பதிவு நாளை மறுநாள் நடைபெற உள்ள நிலையில் இன்று மாலையுடன் பிரச்சாரம் ஓய்ந்தது. முன்னதாக அனைத்துக் கட்சி தலைவர்களும் வாக்குப் பதிவு நடைபெற உள்ள 122 தொகுதிகளிலும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். பிஜேபி மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா சசாரம் மற்றும் அர்வால் தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார். பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், ஐக்கிய ஜனதாதள தலைவரும் முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார் ஆகியோர் அவுரங்கபாத் மற்றும் கைமூர் தொகுதிகளில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்றனர். எதிர்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, கிஷன்கஞ்ச் தொகுதிகளில் நடைபெற்ற பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார்.

*தேசிய சட்டப் பணிகள்*

தேசிய சட்டப் பணிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி விடுத்துள்ள செய்தியில் நீதி சமத்துவம் மற்றும் சட்ட அதிகாரமளித்தல் ஆகியவற்றின் முக்கியத் துவத்தை மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார். நாடு முழுவதும் கடந்த 4 ஆண்டுகளில் நாற்பத்து நான்கரை லட்சத்திற்கும் அதிகமானோர் இலவச சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுள்ளதாகவும் லோக் அதாளத் மூலம் இருப்பத்து மூன்றரை கோடிக்கும் அதிகமான வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டதாகவும் சட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது. இலவச சட்ட உதவிகள் மற்றும் உரிமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

ஜிஎஸ்டி – சிக்கிம்

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், சிக்கிம் மாநிலத்தின் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

**(வாய்ஸ்)**

சிக்கிம் மாநிலத்தைப் பொறுத்தவரை சுற்றுலாத் துறை அம்மாநில பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் இன்றியமையாததாக அமைந்துள்ளது. இத்துறையின் மூலம் 7 லட்சத்து 80 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. ஆகையால் ஜிஎஸ்டி சீர்திருத்தத்தின் காரணமாக அம்மாநிலத்தின் சுற்றுலாத் துறை பெரிதும் ஊக்கம் பெற்றுள்ளது. 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையிலான தங்கும் விடுதிக்கு 18 சதவிகித்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் அதிக நாட்கள் தங்குவதற்கும் வழி வகை ஏற்பட்டுள்ளது. அழகு மற்றும் ஆரோக்கிய சேவைகளுக்கும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதால் சுற்றுலாவுடன் இணைந்து மூலிகை சிகிச்சை துறையும் தற்போது வளர்ச்சி அடைந்துள்ளது. இதுமட்டுமின்றி அம்மாநிலத்தின் முக்கிய வணிகப் பயிரான தேயிலைக்கும், ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் சிறு தேயிலை விவசாயிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் பயன் அளிக்கும் விதமாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

இதுமட்டுமல்லாமல் பழங்கள். காய்கறிகள். பழச் சாறுகள், மற்றும் ஊறுகாய் போன்ற உள்ளூரில் பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்கும் 5 சதவிகித ஜிஎஸ்டி அடுக்குகளுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதால் நுகர்வோர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

மருந்துகளுக்கான வரி குறைப்பின் மூலம் மாநிலத்தில் வளர்ந்து வரும் மருந்து துறையும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. சிக்கிம்மின் முக்கிய பொருளாதார துறைகளில் புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் மாநிலத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிகரமாக இருப்பதுடன் வலுவான ஏற்றுமதிகள் மற்றும் அதிக வேலை வாய்ப்புகளையும் வழங்கி வருவதில் எந்த ஐயமும் இல்லை.

*புதுச்சேரி-வாக்காளர்*

புதுச்சேரியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசின் கட்சிகளைச் சேர்ந்த வாக்குச் சாவடி முகவர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் செயல்முறை விளக்க கூட்டம் உழவர்கரை நகராட்சியில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்றது. வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த செயல் முறைகள் குறித்த விவரங்களை தேர்தல் அதிகாரிகள் விளக்கினார்கள். முகவர்களின் சந்தேகங்களுக்கும், அப்போது விளக்கமளிக்கப்பட்டது. இதனிடையே, புதுச்சேரியில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வீடு வீடாகச் சென்று சேகரிக்கும் பணியில் நாளை முதல் வாக்குச்சாவடி நிலைய அதிகாரிகள் ஈடுபடுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர்கள் தங்களது சந்தேகங்களை வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளிடம் நிவர்த்தி செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய நேரத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

*புதுச்சேரி-அமைதிப் பேரணி*

உலக அமைதி தினத்தை முன்னிட்டு சர்வதேச அமைதி அறக்கட்டளை சார்பில் புதுச்சேரியில் அமைதிப் பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணி புதுச்சேரி புதிய பேருந்து நிலையம் அருகே தொடங்கி கடற்கரை சாலை காந்தி சிலை அருகே நிறைவு பெற்றது. உலக அமைதி தினத்தை முன்னிட்டு சமூகத்தில் அமைதி, ஒற்றுமை, மனிதநேயம் மற்றும் சகிப்புத் தன்மையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நடைபெற்ற இந்த பேரணியில் ஏராளமான தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-பல்கலைக் கழகம்*

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் நிலைத் தன்மைக்கான டிரோன் தொழில் நுட்பம் குறித்த 5 நாள் பயிற்சி பட்டரை நேற்று தொடங்கியது. புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் பசுமை எரிசக்தி தொழில் நுட்பத் துறையும். ரூர்கேலா தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தின் இயந்திர பொறியியல் துறையும் இணைந்து நடத்தும் இந்த பயிற்சி பட்டரை பல்கலைக் கழகத்தில் உள்ள கலாச்சார மாநாட்டு மையத்தின் கருத்தரங்கில் நடைபெற்றது. இதில் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள். ஆராய்ச்சியாளர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டு டிரோன் கட்டமைப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி பெற்றனர்.

*சைபர் கிரைம்*

புதுச்சேரியில் அனுமதி இல்லாமல் நடத்தப்படும் கால் சென்டர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இணையதளம், செயலிகளை உருவாக்கி சைபர் குற்றத்தில் ஈடுபட்டாலும் வெளிநாடுகளில் இருப்பவர்கள் குற்றம் புரிய துணை புரிந்தாலும், உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இணையவழி குற்றப் பிரிவின் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திருமதி ஸ்ருதி எரகட்டி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

*செல்வ கணபதி*

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சகம் பரிந்துரையின் படி, மத்திய நிதித் துறையின் கீழ் இயங்கும் வருமான வரித் துறையின் ஆலோசனைக் குழு உறுப்பினராக மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வ கணபதி நியமிக்கப்பட்டுள்ளார். புதுவையில் இருந்து நியமிக்கப்படும் முதல் மாநிலங்களவை உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத் தக்கது. வரி செலுத்துவோருக்கும், வருமான வரித்துறைக்கும் இடையே பரஸ்பர ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக இந்த ஆலோசனைக் குழு செயல்படும்.

*வானிலை*

வட தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாலும் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று தொடங்கி வரும் 14-ஆம் தேதி வரை இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*சீருடை பணியாளர்* (5)

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் 2-ஆம் நிலை காவலர், சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பு பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு இன்று தமிழகத்தின் 45 மையங்களில் நடைபெற்றது. 3 ஆயிரத்து 655 காலி பணியிடங்களுக்கான இத்தேர்வை 2 லட்சத்திற்கும் அதிகமானோர் எழுதி உள்ளனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டின் ஆன்மிகம் மற்றும் பாரம்பரியத்தில் சமண தத்துவங்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி உத்தரகண்ட் மாநிலம் டேராடூனில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

பீகார் சட்டப் பேரவை தேர்தலின் இறுதி கட்ட வாக்குப் பதிவு நாளை மறுநாள் நடைபெற உள்ள நிலையில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

புதுச்சேரியில் பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் படிவங்கள் நாளை முதல் வீடு வீடாகச் சென்று சேகரிக்கும் பணி தொடங்க உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------